## சோழவந்தான்

# பெருமாள் கோவிலில் சாமி சிலை பிரதிஷ்டை

**சோழவந்தான் ஏப் 12**

மதுரை மாவட்டம் சோழவந்தான் ஜெனக நாராயண பெருமாள் கோவிலில் உள்ள நந்தவனத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஜெனக புஷ்ப கண்ணன் சிலைக்கு நூதன பிரதிஷ்டை விழா நடைபெற்றது. விழாவை முன்னிட்டு கோ பூஜை உடன் யாக வேள்வி தொடங்கி நடைபெற்றது பால் தயிர் பன்னீர் சந்தனம் உள்ளிட்ட 21 திரவியங்களால் அபிஷேகம் நடைபெற்றது பின்னர்தீபாராதனை காட்டப்பட்டு பொதுமக்களுக்கு குங்குமப்பிரசாதம் தீர்த்தம் சடாரி வழங்கப்பட்டது இதில் கோவில் செயல் அலுவலர் திருக்கோவில் பணியாளர்கள் மற்றும் மதுரை பாகவதர் கோஷ்டிகள் சோழவந்தான்மற்றும்சுற்றுவட்டார பகுதியில் உள்ள பக்தர்கள் கலந்து கொண்டனர் கோவில் நந்தவனத்தில் பூச்செடிகள் வைக்கப்பட்டு பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது 4000 திவ்ய பிரபந்த வாசகம் மதுரை பாகவதர் கோஷ்டிகளால் சேவிக்கப்பட்டது

## முள்ளிப்பள்ளம் ஊராட்சியில்

# அடிக்கடி ஏற்படும் மின் தடையால் பொதுமக்கள் அவதி

**சோழவந்தான் ஏப் 12**

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி ஒன்றியம் முள்ளிப்பள்ளம் ஊராட்சியில் 5000–க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசிக்கின்றனர்

இந்த கிராமத்தில் அடிக்கடி ஏற்படும் மின்தடை காரணமாக பொதுமக்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர் குறிப்பாக இரவு நேரங்களில் ஏற்படும் மின்தடை எப்போது வரும் என்றே தெரியவில்லை என கூறுகின்றனர் இதுகுறித்து மின்வாரிய அலுவலர்களுக்கு போன் செய்தால் போனை எடுப்பதில்லை எனவும் மீறி போனை எடுத்தாலும் முறையாக பதில் அளிப்பதில்லை எனவும் அப்பகுதி பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். கூறப்படும் மக்கள் முள்ளிப்பள்ளம் ஊராட்சிக்கு நிரந்தரமாக மின்வாரிய பணியாளர்கள்இல்லாதது பெரும் குறையாக இருப்பதாகவும் இரண்டு தற்காலிக மின் ஊழியர்களைக் கொண்டு அடிக்கடி ஏற்படும் மின்தடைகளை சரி செய்வதாகவும் இதனால் பொதுமக்கள் மற்றும் தேர்வுக்கு தயாராகும் மாணவ மாணவிகள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்

ஆகையால் மின்சார வாரியம் முள்ளிப்பள்ளம் ஊராட்சிக்கு நிரந்தர மின்வாரிய பணியாளரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் மற்றும் மின் தடை ஏற்படும் சமயங்களில் பொதுமக்களால் கூறப்படும் பு

கார்களை உடனுக்குடன் சரி செய்ய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என அப்பகுதியினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## சமையல் கியாஸ் விலை உயர்வு:

# மாதர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

**விருதுநகர்,ஏப்.12**

விருதுநகர் ஜனநாயக மாதர் சங்கத்தின் சார்பில் பழைய பஸ் நிலையம் முன்பு சமையல் கேஸ் விலை உயர்வினை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நகர தலைவர் ஜெயா ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார். நகரச் செயலாளர் ராஜேஸ்வரி முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர் உமா மகேஸ்வரி சிறப்புரையாற்றினார்.

மாநில செயலாளர் லட்சுமி கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் மத்திய அரசை கண்டித்துகண்டனகோஷங்கள் எழுப்பப்பட்டதோடு சமையல் கியாஸ் சிலிண்டருக்கு மாலை அணிவித்து ஒப்பாரி வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## சிவகங்கையில்

# சமரச தீர்வு நாள் இருசக்கர வாகன பேரணி

## நீதிபதி தொடங்கி வைத்தார்

**சிவகங்கை,ஏப்.12–**

தமிழ்நாடு மாநில சமரச தீர்வு மைய வழிகாட்டுதலின்படி, சிவகங்கை மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் சார்பில் சமரச தீர்வு நாளை முன்னிட்டு சிவகங்கை ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் இருசக்கர வாகன பேரணியை முதன்மை மாவட்ட நீதிபதி அறிவொளி கொடி அசைத்து தொடங்கி வைத்தார்.சமரச தீர்வு நாளை முன்னிட்டு சிவகங்கை, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் சமரச தீர்வு மைய பணிகள் குறித்த வீடியோ காட்சி விளம்பர வாகனம் மூலம் ஒளிபரப்பப்பட்டது. போக்குவரத்து காவல்துறையினர், வழக்கறிஞர்கள், பணியாளர்கள் தலைகவசம் அணிந்து இருசக்கர வாகனத்தில்சமரசதீர்வு குறித்து வாசகங்கள் அடங்கிய பதாகைகளைபிடித்தவாறு ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் இருந்து பேரணியாக திருப்பத்தூர் சாலை, பழைய நீதிமன்ற சாலை, காந்தி வீதி மற்றும் மரக்கடை வீதி வழியாக பேருந்து நிலையத்தை வந்து அடைந்தனர்.

முதன்மை மாவட்ட நீதிபதி தலைமையில் நீதிபதிகள், வழக்கறிஞர்கள், பணியாளர்கள் ஒருங்கிணைந்த நீதிமன்ற வைளாகத்தில் வளாகத்தில் இருந்து நடைபயணமாக காஞ்சிரங்கால் பேருந்து நிலையம் வரை சென்று சமரச தீர்வு நாள் குறித்த துண்டு பிரசரங்களை பொதுமக்களுக்கு வழங்கினார்கள். நிகழ்ச்சியில் குடும்ப நல நீதிபதி முத்துக்குமரன், மாவட்ட மகிளா நீதிமன்ற நீதிபதி கோகுல் முருகன் , தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் பசும்பொன் சண்முகையா, சார்பு நீதிபதி பாண்டி, ஊழல் தடுப்பு நீதிமன்ற நீதிபதி செந்தில்முரளி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர்/சார்பு நீதிபதி ராதிகா, குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிபதி செல்வம், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிபதி செல்வி பதர்ஷினி, குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 நீதிபதி தங்கமணி மற்றும் வழக்கறிஞர்கள், பணியாளர்கள், வழக்காடிகள் கலந்து கொண்டனர்.

# ராமேசுவரம் முருகன் கோவிலில் பங்குனி உத்திர திருவிழா

**ராமேசுவரம்ஏப்:12–**

ராமேசுவரம் ராமநாதசுவாமி திருக்கோவில் மேலக்கோபுர வாசலில் அமைந்துள்ள பாலசுப்பிரமணிய முருகன் கோவிலில் அகில இந்திய யாத்திரை பணியாளர்கள் சங்கம் சார்பில் 63வது ஆண்டு பங்குனி உத்திர உற்சவ திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. ஆயிரக்கணக்கான பக்தர்கள்பல்வேறுகாவடிகளை எடுத்து வந்து நேர்த்திக டன் செலுத்தினர்.

உலக பிரசித்தி பெற்ற ராமேசுவரம் ராமநாதசுவாமி திருக்கோவிலின் மேற்கு கோபுர வாசலில் அமைந்துள்ள முருகப்பெருமானுக்கு அகில இந்திய யாத்திரை பணியாளர் சங்கம் சார்பில்63ம் ஆண்டு பங்குனி உத்திர திருவிழா நடைபெற்று வருகிறது.

பக்தர்கள் பால்காவடி தேர்காவடி பறவைகாவடி மயில்காவடி என ஏராளமான காவடிகள் வந்த வண்ணமாக இருந்தது. இந்த காவடிகள் வெகு தூரமான பாம்பன் தங்கச்சிமடம் தனுஷ்கோடி புது ரோடு கரையூர் சேராங்கோட்டை ராமகிருஷ்ணபுரம் சம்பை மாங்காடு என பல்வேறு கிராமங்களிலிருந்து காவடிகள் கடும் வெயிலையும் பற்றி பொருட்படுத்தாமல் எடுத்து வந்தனர்.

காவடிகள்எடுத்து வரும் பக்தர்களின் வசதிக்காக 10மீட்டர் தூரத்தில் ஆங்காங்கேபல்வேறுசமூகத்தை சேர்ந்தவர்கள்தண்ணீர் பந்தல் அமைத்தனர்.

காவடிகள்எடுத்து வரும் பக்தர்கள் வசதிக்காக அகில இந்திய யாத்திரை பணியாளர் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் காவடிகளுக்கு இடையூறு இல்லாமல் எடுத்து செல்லவும் தாசினம் செய்யவும் மேலவாசல் முருகன் கோவிலில் வழி வகுத்து கொடுத்தனர்.

ராமநாதபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ் உத்தரவின் பேரில் ராமேசுவரம் பங்குனி உத்திர திருவிழாவிற்கு பாதுகாப்பு பணியில் சுமார் 300க்கும் மேற்பட்ட காவல்துறை அதிகாரிகள் ஊர்காவல்படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றார்கள். மேலும் அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருப்பதற்காக நகரின் முக்கிய பகுதிகளில் சிசிடிவி கேமராக்கள் வைத்து காவல்துறை அதிகாரிகள் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கோவிலுக்கு வரக்கூடிய பக்தர்களுக்கு இடையூறு இல்லாத வண்ணம் திட்டக்குடி சாலை வடக்குரத வீதியில் தடுப்பு வேலிகள் வைத்துசாலைகள்அடைக்கப்பட்டு வாகனங்கள் அனைத்தும் மாற்றுப்பாதையில்அனுப்பப்பட்டது

## நாகர்கோவில் கிம்ஸ் மருத்துவமனையில்

# ஹெச்.பி.வி. வைரஸ் இலவச தடுப்பூசி முகாம்



**நாகர்கோவில், ஏப். 12–**

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் கிம்ஸ் மருத்துவமனையில் நடைபெற்று வரும் மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) இலவச தடுப்பூசி முகாமை நாகர்கோவில் ஜி.எஸ்.டி. ஆணையர் ரதி சுந்தரம் தொடங்கி வைத்தார்.

ஹெச்.பி.வி. என்று அழைக்கப்படும் மனித பாப்பிலோமா வைரஸ், பாலியல் செயல்பாடு மூலம் பரவுகிறது. HPV வைரசின் சில வகைகள் பிறப்புறுப்பு மருக்களை ஏற்படுத்துகின்றன. மற்ற ஹெச்.பி.வி. வகைகள் புற்றுநோய்களை ஏற்படுத்தக்கூடும். பெரும்பாலும், உடலால் HPV ஐக் கண்டுபிடித்து அழிக்க முடியும். ஆனால் வைரஸ் உடலில் நீண்ட காலம் தங்கியிருந்தால், அது புற்றுநோயை ஏற்படுத்தும். ஹெச்.பி.வி. க்கு எதிராக தடுப்பூசி போடுவது ஆண்கள் மற்றும் பெண்களுக்கு புற்றுநோயைத் தடுக்க உதவுவதாக ஆய்வுகள் கூறுகிறது

ஹெச்.பி.வி. தடுப்பூசி பிறப்புறுப்பு மருக்கள் மற்றும் பெரும்பாலான கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயிலிருந்து பாதுகாக்கிறது. மேலும் ஹெச்.பி. வி வைரசால் ல் ஏற்படும் வாய், தொண்டை, தலை மற்றும் கழுத்து புற்று நோய்களிலிருந்து பாதுகாப்பது மட்டுல்லாமல் நோய் எதிர்ப்பு மண்டல விழிப்புணர்வை உருவாக்க ஒரு பாதுகாப்பான வழியை வழங்குகிறது. நாகர்கோவில் கிம்ஸ் மருத்துவமனையின் ஒருங்கிணைந்த சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஒன்பது முதல் 26 வயது வரையிலான பெண்களுக்கு இந்த தடுப்பூசி இம்மாத இறுதிவரை இலவசமாக போடப்படுகிறது. இதற்கான தொடக்கவிழா நாகர்கோவில் கிம்ஸ் மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது. நாகர்கோவில் ஜி. எஸ்.டி. கமிஷனர் ரதி சுந்தரம் இதனை தொடங்கி வைத்து வாழ்த்தி பேசினார். நாகர்கோவில் கிம்ஸ் மருத்துமனை மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் எஸ். தாணு வரவேற்றார். மகப்பேறியல் மற்றும் மகளிர் மருத்துவ துறை தலைவர் டாகடர் மினி கோபால் HPV வைரஸ் பற்றி உரை நிகழ்த்தினார். 04652 711000 என்ற எண்ணில் முன்பதிவு செய்தும், மருத்துவமனையில் சென்றும் தடுப்பூசி போட முடியும் என்று தெரிவிக்கப்பட்டு ள்ளது.

## வள்ளியூர் அருகே பரிதாபம்:

# குடும்பத் தகராறில் மனைவி ஹேர் டை குடித்து சாவு

## விசாரணைக்கு பயந்து கணவர் தூக்குப்போட்டு தற்கொலை

**நெல்லை, ஏப்.12**

வள்ளியூர் அருகே குடும்பத் தகராறில் மனைவி ஹேர் டை குடித்து இறந்த நிலையில், அவரது கணவர் போலீசார் விசாரணைக்கு பயந்து தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. நெல்லை மாவட்டம் ராதாபுரம் அருகே உள்ள சமூகரெங்கபுரம் இலங்கை தமிழர் குடியிருப்பை சேர்ந்தவர் தியாகராஜன். இவரது மகள் கீதா(23). திருச்சி கொட்டாம்பட்டியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமை சேர்ந்தவர் நந்தகுமார்(27). இதனிடையே உறவினர்களான இவர்கள் இருவருக்கும் கடந்த 4 வருடங்களுக்கு முன் திருமணம் நடந்துள்ளது. நந்தகுமார் பெயிண்டிங் வேலைக்கு சென்று வந்த நிலையில் திருமணம் முடிந்த பின்னர் சரிவர வேலைக்கு செல்லாமல் இருந்துள்ளார். மேலும் இந்த தம்பதிக்கு குழந்தை இல்லாத நிலையில் நந்தகுமார் குடிப்பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளார். இதனால் தினமும் மதுகுடித்துவிட்டு வந்து நந்தகுமார்மனைவி கீதாவுடன் தகராறில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இதையடுத்து கீதா கணவரிடம் கோபித்துக் கொண்டு சமூகரெங்கபுரத்தில்உள்ளதனதுபெற்றோர் வீட்டுக்கு வந்துவிட்டார். அவர் கடந்த 3 வருடங்களாக தனது பெற்றோருடனே வசித்து வந்தார். இதைத்தொடர்ந்து நந்தகுமார் அவ்வப்போது மாமனார் ஊருக்கு வந்து தனது மனைவியை பார்த்து சென்றுள்ளார்.

இந்த நிலையில் நேற்று நந்தகுமார் சமூகரெங்கபுரத்திற்கு வந்துள்ளார். அப்போது கீதாவுக்கும், அவரது கணவர் நந்தகுமாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. இதில் வாக்குவாதம் முற்றிய நிலையில் விரக்தி அடைந்த கீதா வீட்டில் இருந்த ஹேர் டையை எடுத்து குடித்து மயங்கி விழுந்தார்.

இதனை பார்த்த அவரது உறவினர்கள் கீதாவை மீட்டு சிகிச்சைக்காக நாகர்கோவில் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிறிது நேரத்திலேயே சிகிச்சை பலனளிக்காமல் அவர் பரிதாபமாக இறந்துவிட்டார்.

இதனை அறிந்த நந்தகுமார் போலீஸ் விசாரணைக்கு பயந்து வீட்டில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார். இதுகுறித்து ராதாபுரம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தகவல் அறிந்த போலீசார் அங்கு சென்று நந்தகுமார் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக ராதாபுரம் போலீஸ் இன்ஸ்பெக்டர்(பொறுப்பு) ரெகுராஜன் வழக்குப்பதிந்து விசாரணைநடத்திவருகின்றார். நந்தகுமார் மற்றும் கீதாவுக்கு திருமணம் முடிந்து 4 வருடங்களே ஆவதால் ஆர்.டி.ஓ. விசாரணைக்கும் உத்திரவிடப்பட்டுள்ளது. குடும்ப தகராறில் தம்பதி தற்கொலை செய்து கொண்ட சம்பவம் குடும்பத்தினரிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



கேஸ் விலை உயர்வை கண்டித்து காரியாபட்டியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# கூட்டுறவு மேலாண்மை பயிற்சிக்கு ஏப்.16 முதல் விண்ணப்பம்

## ஆட்சியர் தகவல்

**சென்னை,ஏப்.12–**

சென்னை கூட்டுறவு மேலாண்மை நிலையத்தில் அஞ்சல் வழி கூட்டுறவு மேலாண்மை பட்டய பயிற்சி மே 9–ம் தேதி தொடங்கப்பட உள்ளது.

12–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று, கூட்டுறவு நிறுவனங்கள், கூட்டுறவு சங்கங்களின் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள் விண்ணப்பிக்கலாம்.

தகுதியுள்ள நபர்கள் www.tncu.gov.tn.in என்ற இணையதளத்தில் ஏப்.16 முதல் மே 6–ம் தேதி வரை விண்ணப்பிக்க அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

ஆன்லைன் மூலமாக மட்டுமேவிண்ணப்பிக்க வேண்டும். பூர்த்திசெய்த விண்ணப்பத்துடன், உரிய சான்றிதழ்கள் , புகைப்படத்தை இணைத்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

பயிற்சி கட்டணம் ரூ.20,750 விண்ணப்ப கட்டணம் ரூ.100என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது ஓராண்டு பயிற்சி ஆகும். புதிய பாடத்திட்டத்தின் படி தமிழில் வகுப்புகள் நடைபெறும். தேர்வுகளும் தமிழில் நடத்தப்படும்.

கூடுதல் விவரம் அறிய 9444470013,044–25360041 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம் என்று சென்னை மாவட்ட ஆட்சியர்ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.


**NORTHERN ARC — நார்தர்ன் ஆர்க் கேபிடல் லிமிடெட்**

பதிவு அலுவலகம்: 10வது தளம், கட்டடம்I, ஐஐடிமெட்ராஸ் ஆராய்ச்சி பூங்கா,கனகம் கிராமம், தரமணி, சென்னை 600113, தமிழ்நாடு.

**விதி 8(1) உடைமையாக்க அறிவிப்பு**

ஆனால், கீழே கையொப்பமிடப்பட்டவர், நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பத்திர வட்டி அமலாக்கச் சட்டம், 2002 இன் கீழ் நார்தர்ன் ஆர்க் கேபிடல் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகவும், பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் பிரிவு 13 (12) உடன் சேர்த்துப் படிக்கப்பட்ட விதி 3 இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, **ஜனவரி 13, 2025** தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டார், கடன் வாங்கியவர் **(1) ராஜசேகர் ராமச்சந்திர ராகவன் (2) பத்மப்ரியா ராஜசேகா, (இணை கடன் வாங்கியவர்) (3) ஆர் ஸ்வேதா (இணை கடன் வாங்கியவர் சேர்.** 1/48, பெருமாள், கோவில் தெரு, சோமங்கலம், காஞ்சிபுரம் 600069 தமிழ்நாடு, **ஜனவரி 9 2025,** ஆம் தேதி நிலவரப்படி **INR 20,52,593 (இருபது லட்சம் ஐம்பத்து இரண்டாயிரத்து ஐநூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்)** அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை திருப்பிச் செலுத்துமாறு கேட்டுக்கொண்டார். மேற்கூறிய அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து **60** நாட்களுக்குள் வட்டியுடன்.

கடன் வாங்கியவர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கீழே கையொப்பமிட்டவர் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை கையொப்பமிட்டுள்ளார் என்று கடன் வாங்கியவர்/உத்தரவாதம் அளிப்பவர்/இணை கடன் வாங்கியவர் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. **ஏப்ரல் 08, 2025** தேதியிட்ட இந்த உடைமை அறிவிப்பில் கூறப்பட்ட விதிகளின் 8வது விதியுடன் சேர்த்து வாசிக்கப்பட்ட சட்டத்தின் பிரிவு 13(4) இன் கீழ் அவருக்கு/அவளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி.

கடன் வாங்கியவர்/உத்தரவாதம் அளிப்பவர்/இணை கடன் வாங்கியவர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் சொத்தை கையாள வேண்டாம் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும் சொத்துடனான எந்தவொரு பரிவர்த்தனையும் ஜனவரி 9, 2025 அன்று வட்டி, செலவுகள் போன்றவற்றுடன் சேர்த்து **INR 20,52,593 (இருபது லட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து ஐந்நூற்று தொண்ணூற்று மூன்று மட்டும்)** தொகைக்கு வடக்கு ஆர்க் கேபிடல் லிமிடெட் பொறுப்பேற்கும்.

**அசையாச் சொத்தின் விளக்கம்**

அந்தச் சொத்தின் அனைத்துப் பகுதியும், கட்டிடம் மற்றும் உபகரணங்களும் சேர்த்து 2460 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள, கிராமநத்தம் சர்வே எண். 245/12a இல், பட்டா பழைய S. எண். 245/12a1, புதிய டவுன் சர்வே எண்.560/5 இன் படி) எண். 39, சோமனகளம் கிராமம் (பிளாக் A), இப்போது குரத்தூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், அமைந்துள்ளது, மேலும் நிலம்: **எல்லைகள்: வடக்கு:** பெருமாள் கோவில் தெரு **தெற்கு:** ரவி – எனது நிலத்திற்குச் சொந்தமான சொத்து **கிழக்கு:** குமார் வீடு சொத்து **மேற்கு:** துரை காலியாக உள்ள நிலம்

இடம்: காஞ்சிபுரம்
தேதி: 08 ஏப்ரல் 2025

எஸ்டி/
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
நார்தர்ன் ஆர்க் கேபிடல் லிமிடெட்



**MANAPPURAM HOME FINANCE LTD. — மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்**

முன்னர் மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
CIN: U65923KL2010PLC039179

அலகு 301-315, 3வது தளம், A பிரிவு, கனகியா வால் ஸ்ட்ரீட், அந்தேரிகுர்லா சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை - 400093, **தொடர்பு எண்:** 022-68194000/022-66211000.

**உடைமை அறிவிப்பு (அசையா சொத்துக்களுக்கு)**

கீழே கையொப்பமிடப்பட்டவர் மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் ("MAHOFIN") அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக இருப்பதால், நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கம் *[சட்டம்], 2002 (54 of 2002) இன் கீழ் மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் பிரிவு 13(12) உடன் சேர்த்து வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கடன் வாங்குபவர்கள் மற்றும் இணை கடன் வாங்குபவர்கள் அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அறிவிப்பிலும் அதன் மீதான வட்டியிலும் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்று ஒரு கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டார். கடன் வாங்கியவர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கீழே கையொப்பமிடப்பட்டவர் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை உண்மையில் உடைமையாக்கிக் கொண்டுள்ளார் என்று கடன் வாங்கியவருக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. மேற்கூறிய விதிகளின் பிரிவு 13(4) இன் கீழ் அவருக்கு/அவளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி *[சட்டம்] விதி 9 உடன் சேர்த்து வாசிக்கப்பட்டது. குறிப்பாக கடன் வாங்குபவர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் சொத்தை கையாள வேண்டாம் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும் சொத்துடனான எந்தவொரு பரிவர்த்தனையும் மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் பொறுப்பிற்கு உட்பட்டது, அந்தந்த சொத்துக்கள் ஒவ்வொன்றிற்கும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி:

| வ எண். | கடன் வாங்குபவரின் பெயர் மற்றும் இணை கடன் வாங்குபவரின் பெயர்/கடன் கணக்கு எண்/கிளை | வட்டி உருவாக்கப்பட்ட பாதுகாக்கப்பட்ட சொத்தின் விளக்கம் | கோரிக்கை அறிவிப்பு அனுப்பப்பட்ட தேதி மற்றும் நிலுவையில் உள்ள தொகை | உண்மையான உடைமை தேதி |
|---|---|---|---|---|
| 1 | எஸ். சௌமியா - தேவா ரேணு/ எம்.எச்.எல்00420008546/ வேலூர் | R.S. எண் 386/3, பிளாட் எண் 35, புதுர் கிராமம், அன்னைக்கட்டு தாலுகா, மாரியம்மன் கோவில் அருகில், மாவட்டம்வேலூர், போ.ஓ. புதூர், வேலூர், தமிழ்நாடு, பின்: 632105 | 22-11-2023 & ரூ.5,38,003/- | 10-04-2025 |

தேதி: 12ஏப்ரல்2025
இடம்: வேலூர்

எஸ்டி/ அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் ஹோம் ஃபைனான்ஸ் லிமிடெட்



**Muthoot Homefin — முத்தூட் ஹோம்ஃபின் (இந்தியா) லிமிடெட்**

கார்ப்பரேட் அலுவலகம்: யூனிட் எண். 19NE, 19வது மாடி, தி ரூபி, சேனாபதி பாபட் மார்க், ரூபரேல் கல்லூரி அருகில், தாதர் (மேற்கு), மும்பை, மகாராஷ்டிரா-400 028

**உடைமை அறிவிப்பு** (பாதுகாப்பு வட்டி அமலாக்க விதிகள், 2002 இன் விதி 8(1) உடன் படிக்கப்பட்ட இணைப்பு IV இன் படி)

கீழே கையொப்பமிடப்பட்டவர் **முத்தூட் ஹோம்ஃபின் (இந்தியா) லிமிடெட் (MHIL)** இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆவார், மேலும் நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பத்திர வட்டி அமலாக்கச் சட்டம் 2002 இன் பிரிவு 13(2) உடன் படிக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம், நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் வாங்குபவர்(கள்)/ உத்தரவாததாரர்(கள்) க்கு வழங்கப்பட்ட கோரிக்கை அறிவிப்பு(கள்) 60 நாட்களுக்குள் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை திருப்பிச் செலுத்த வேண்டும். மேற்கூறிய அறிவிப்பைப் பெற்ற தேதி. கடன் வாங்கியவர் தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கீழே கையொப்பமிட்டவர் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை, மேற்கூறிய விதிகளின் பிரிவு 13(4) உடன் சேர்த்துப் படிக்கப்பட்ட சட்டத்தின் பிரிவு 8 இன் கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கையொப்பமிட்டவர் கையொப்பமிட்டுள்ளார் என்று கடன் வாங்குபவர்(கள்)/ இணை கடன் வாங்குபவர்(கள்)/ உத்தரவாதம் அளிப்பவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. குறிப்பாகக் கடன் வாங்குபவர் மற்றும் பொதுமக்கள் அனைவரும் சொத்தை கையாள வேண்டாம் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள், மேலும் சொத்துடனான எந்தவொரு பரிவர்த்தனையும் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கு வட்டியுடன் **முத்தூட் ஹோம்ஃபின் (இந்தியா) லிமிடெட்**டின் பொறுப்பிற்கு உட்பட்டது. கடன் வாங்குபவரின் கவனம் சட்டத்தின் பிரிவு 13 இன் துணைப் பிரிவு (8) இன் விதிகளுக்கு அழைக்கப்படுகிறது, பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்டுக்கொள்ள கிடைக்கும் நேரம் குறித்து

| வ எண். | கடன் வாங்குபவரின் பெயர்/ இணை கடன் வாங்குபவர்(கள்)/ கடன் கணக்கு எண்/கிளை | பாதுகாக்கப்பட்ட சொத்துக்களின் சுருக்கமான விவரங்கள் | கோரிக்கை அறிவிப்பு தேதி & மொத்த நிலுவைத் தொகைகள் (ரூ.) | உடைமை எடுத்த தேதி |
|---|---|---|---|---|
| 1. | சண்முகம் வி ஆர்/ வித்யாவதி எஸ்/ தங்கமணி ஆர்/ 09909900152/ 09909900181/ பாண்டிச்சேரி | எஸ். எண்280/1, கிழக்கு பகுதி பிளாட் எண்17, பூதேரி மெயின் ரோடு, கிடங்கல், திண்டிவனம்-604001 ஜியோ கோ ஆர்டினேட்ஸ் 12.227987, 79. 642722 வனதுர்கை அம்மன் கோயில் மாவட்டம் விழுப்புரம் மாநிலம் தமிழ்நாடு பின்கோடு-604001 வடக்குபிளாட் அருகில் உள்ள லேண்ட்மார்க் எண்10, தெற்குசாலை, கிழக்குபிளாட் எண் 16, பிளாட் எண்17 இன் மேற்குமேற்கு பகுதி | 19 ஜனவரி 2025/ ரூ. 10,47,806/- ரூ. பத்து லட்சத்து நாற்பத்தேழாயிரத்து எண்ணூற்று ஆறு மட்டும். - ரூ. 3,84,768/- ரூ. மூன்று லட்சத்து எண்பத்து நாலாயிரத்து எழுநூற்று அறுபத்தெட்டு மட்டும். | ஏப்ரல் 8, 2025 |

தேதி: ஏப்ரல் 12, 2025
இடம்: பாண்டிச்சேரி

எஸ்டி/ அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,
முத்தூட் ஹோம்ஃபின் (இந்தியா) லிமிடெட்



**ICICI Home Finance**

கார்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ ஹெச்எஃப்சி டவர், அந்தேரி குர்லா ரோடு, ஜே.பி. நகர்,அந்தேரி (கிழக்கு), மும்பை-400059

கிளை அலுவலகம்: 2வது தளம், சுவர்ணாம்பிகை பிளாசா, ஓமலூர் பிரதான சாலை, சேலம்-636009

**[விதி 8(6)க்கான விதிமுறையைப் பார்க்கவும்] அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு**

நிதி சொத்துக்களை பத்திரப்படுத்துதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டியை அமலாக்குதல் சட்டம், 2002 இன் கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு, பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் விதி 8(6) இன் விதிமுறையுடன் படிக்கப்பட்டது.

பொதுவாக பொதுமக்களுக்கு, குறிப்பாக கடன் வாங்குபவர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது, கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்து பாதுகாக்கப்பட்ட கடனாளியிடம் அடமானம் வைக்கப்பட்டுள்ளது/வசூலிக்கப்பட்டுள்ளது, அதன் உரிமை அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் எடுக்கப்பட்டுள்ளது. ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் சொத்துக்கள், கீழே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கமான விவரங்களின்படி, "எங்கு இருக்கிறதோ அப்படியே", "இருக்கிறதோ அப்படியே" மற்றும் "எது இருக்கிறதோ அப்படியே" என்ற அடிப்படையில் விற்கப்படும்;

| வ எண். | கடன் வாங்குபவர்கள்/ இணை கடன் வாங்குபவர்கள்/ உத்தரவாததாரர்கள்/ சட்டப்பூர்வ வாரிசுகளின் பெயர். கடன் கணக்கு எண். | அறியப்பட்ட சுமைகள் ஏதேனும் இருந்தால், பாதுகாக்கப்பட்ட சொத்தின் (கள்) விவரங்கள் | நிலுவையில் உள்ள தொகை | இருப்பு விலை / எர்னெஸ்ட் டெபாசிட் பணம் | சொத்து ஆய்வு தேதி மற்றும் நேரம் | ஏலத்தின் தேதி மற்றும் நேரம் | ஏல தேதிக்கு ஒரு நாள் முன் | சர்ஃபேசி நிலை |
|---|---|---|---|---|---|---|---|---|
| (அ) | (ஆ) | (இ) | (ஈ) | (உ) | (ஊ) | (எ) | (ஏ) | (ஐ) |
| 1 | ஏ திருமுருகன் (கடன் வாங்கியவர்) எஸ். வசந்தி (இணை கடன் வாங்கியவர்) கடன் கணக்கு எண். LHTRI00001527420 & LHTRI00001527714 | நாதம் பழைய SF எண். 711/1P. புதிய SF எண். 711/6, சோனாப்பேட்டை மேற்கு கிராமம், முன்னவல்கோட்டை வருவாய் கிராமம், நீடாமங்கலம் SRO, நாகப்பட்டினம் மாவட்டம் மற்றும் பதிவு மாவட்டம். | ரூ. 21,92,901/ (ஏப்ரல் 7, 2025 நிலவரப்படி) | ரூ. 30,22,020/- / ரூ. 3,02,202/- | மே 9, 25 காலை 11 மணி பிற்பகல் 3 மணி | மே 16,' 25 பிற்பகல் 2 மணி பிற்பகல் 3 மணி | மே 15, 25 | உடல் உடைமை |

ஆன்லைன் ஏலம் எங்கள் ஏல நிறுவனமான வேல்யூ டிரஸ்ட் கேபிடல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளத்தில் (URL இணைப்பு https://BidDeal.in) நடத்தப்படும். அடமானதாரர்கள்/அறிவிப்புதாரர்கள் மே 15, 2025 அன்று மாலை 5.00 மணிக்கு முன் மொத்த நிலுவைத் தொகையை மேலும் வட்டியுடன் செலுத்த கடைசி வாய்ப்பு வழங்கப்படுகிறது, இல்லையெனில் இந்த பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் மேற்கண்ட அட்டவணையின்படி விற்கப்படும்.

வருங்கால ஏலதாரர்(கள்) **மே 15, 2025** அன்று அல்லது அதற்கு முன் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கிளை அலுவலக முகவரியில் ஈவுத்தொகை பண வைப்பு (EMD) RTGS/ டிமாண்ட் டிராஃப்டை (DD) (பத்தி E ஐப் பார்க்கவும்) சமர்ப்பிக்க வேண்டும். வருங்கால ஏலதாரர்(கள்) **மே 15, 2025** அன்று அல்லது அதற்கு முன் மாலை 04:00 மணிக்கு முன் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதிவு படிவம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் படிவத்தின் கையொப்பமிடப்பட்ட நகலையும் சமர்ப்பிக்க வேண்டும். வருங்கால ஏலதாரர்(கள்) **மே 15, 2025** அன்று அல்லது அதற்கு முன் மாலை 05.00 மணிக்கு முன் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கிளை அலுவலக முகவரியில் கையொப்பமிடப்பட்ட பதிவு படிவம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் படிவத்தையும் சமர்ப்பிக்க வேண்டும். ஈவுத்தொகை பண வைப்பு கோரிக்கை வரைவோலை (DD) தேசியமயமாக்கப்பட்ட/திட்டமிடப்பட்ட வங்கியிலிருந்து கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிளை அலுவலக முகவரியில் "ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் காம் கம்பெனி லிமிடெட் லிமிடெட் ஏலம்" என்ற பெயரில் செலுத்தப்பட வேண்டும்.

ஆய்வு, ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது டெண்டர்களை சமர்ப்பித்தல் தொடர்பான கூடுதல் விளக்கங்களுக்கு, தயவுசெய்து 9920807300 என்ற எண்ணில் ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டைத் தொடர்பு கொள்ளவும்.

மேலும் எந்த காரணங்களையும் தெரிவிக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்க அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு உரிமை உண்டு. விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவுசெய்து https://www.icicihfc.com/ ஐப் பார்வையிடவும்.

தேதி: 12.04.2025
இடம்: திருவாரூர்

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, ஐசிஐசிஐ ஹோம் ஃபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்
CIN: U65922MH1999PLC120106